ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2026 ஏப்பிறல் 30 |

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் – 2026 மாச்சு

## மொத்த ஏற்றுமதிகள்
(பொருட்கள் மற்றும் பணிகள்)

ஐ.அ.டொலர் 1,796 மில்
-5.8% ▼ 2026 மாச்சில் (ஆ–ஆ)

ஐ.அ.டொலர் 5,391 மில்
0.2% ▲ 2026 சன–மாச்சில் (ஆ–ஆ)

### பொருட்கள் ஏற்றுமதிகள்

ஐ.அ.டொலர் 1,254 மில்
1.0% ▲ 2026 மாச்சில் (ஆ–ஆ)

ஐ.அ.டொலர் 3,461 மில்
3.4% ▲ 2026 சன–மாச்சில் (ஆ–ஆ)



### பணிகள் ஏற்றுமதிகள்

ஐ.அ.டொலர் 542 மில்
-18.5% ▼ 2026 மாச்சில் (ஆ–ஆ)

ஐ.அ.டொலர் 1,930 மில்
-5.2% ▼ 2026 சன–மாச்சில் (ஆ–ஆ)

## சுற்றுலாத்துறை வருவாய்கள்

ஐ.அ.டொலர் 224 மில் *
(சுற்றுலாப் பயணிகளின் வருகை: 183,979)
2026 மாச்சில்

ஐ.அ.டொலர் 954 மில்
(சுற்றுலாப் பயணிகளின் வருகை: 740,634)
2026 சன–மாச்சில்



* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் திருத்தப்பட்ட அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையிலானது.

## தொழிலாளர் பணவனுப்பல்கள் **

ஐ.அ.டொலர் 815 மில்
2026 மாச்சில்

ஐ.அ.டொலர் 2,295 மில்
2026 சன–மாச்சில்

** டித்வா புயலினைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற நிதியியல் உதவி போன்ற ஏனைய பணவனுப்பல்களை இது உள்ளடக்கலாம்.

## வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை

ஐ.அ.டொலர் 880 மில்
2026 மாச்சில்

ஐ.அ.டொலர் 2,310 மில்
2026 சன–மாச்சில்

## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ***

ஐ.அ.டொலர் 7.0 பில்
2026 மாச்சு இறுதியில்



### இறக்குமதி உள்ளடக்கம்
3.8 மாதங்கள்

*** சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது.

## பொருட்கள் இறக்குமதிகள்

ஐ.அ.டொலர் 2,134 மில்
30.3% ▲ 2026 மாச்சில் (ஆ–ஆ)

ஐ.அ.டொலர் 5,771 மில்
18.1% ▲ 2026 சன–மாச்சில் (ஆ–ஆ)



## நடைமுறைக் கணக்கு மீதி

ஐ.அ.டொலர் 45 மில்
2026 மாச்சில்

ஐ.அ.டொலர் 531 மில்
2026 சன–மாச்சில்




## செலாவணி வீதம்
(ஐ.அ.டொலரொன்றுக்கான இ.ரு)




**2.9%**
2026 ஏப்பிறல் இறுதியில் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியிலான பெறுமதித்தேய்மானம்



# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத் தொகுப்பு

## 2026 மாச்சு

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தமை மற்றும் பணிகள் மிகை மிதமடைந்தமை போன்றவற்றிற்கு மத்தியிலும், உயர்வடைந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் குறைவான முதலாந்தர வருமானப் பற்றாக்குறை போன்றவற்றினால் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டு, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கானது 2026 மாச்சில் சிறிதளவு மிகையொன்றைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த நடைமுறைக் கணக்கு மிகையானது 2026இன் முதலாம் காலாண்டில் ஐ.அ.டொலர் 531 மில்லியனைப் பதிவுசெய்தது.

- வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2026 மாச்சில் விரிவடைந்து, ஏற்றுமதிகளை விடவும் இறக்குமதிகளில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சியினைப் பிரதிபலித்தது. 2026இன் முதலாம் காலாண்டில், வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2025இன் தொடர்புடைய காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2.3 பில்லியன் தொகைக்கு விரிவடைந்தது.

- மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் ஏற்பட்ட எரிபொருள் விலைகளிலும் அளவுகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினமானது 2026 மாச்சில் ஐ.அ.டொலர் 630 மில்லியனிற்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் 74.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.

- தனியாள் மற்றும் வர்த்தக நோக்குடைய வாகனங்கள் ஆகிய இரண்டும் உள்ளடங்கலாக வாகன இறக்குமதிகள் 2026 மாச்சில் ஐ.அ.டொலர் 195 மில்லியனாக விளங்கி, 2026இன் முதலாம் காலாண்டில் மொத்த வாகன இறக்குமதிகளை ஐ.அ.டொலர் 613 மில்லியனிற்குக் கொண்டுசென்றுள்ளது.

- ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டமையினால் வர்த்தக மாற்று விகிதமானது 2026 மாச்சில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் தேய்வடைந்து காணப்பட்டது. அதேவேளை, 2026இன் முதலாம் காலாண்டில், வர்த்தக மாற்று விகிதமானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு தேய்வடைந்து காணப்பட்டது.

- முக்கியமாக சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறைவின் காரணமாக பணிகள் கணக்கில் ஏற்பட்ட மிகையானது 2026 மாச்சில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் 42.4 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 227 மில்லியனிற்கு சடுதியாக வீழ்ச்சியடைந்தது. ஒன்றுசேர்ந்த மிகையும் 2026இன் முதலாம் காலாண்டில் 2025இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 20.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

- மத்திய கிழக்கு யுத்தத்தின் தாக்கத்தின் காரணமாக, 2026 மாச்சில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் 19.8 சதவீதம் கொண்ட சடுதியான சுருக்கமொன்றைப் பிரதிபலித்து, 183,979இற்கு வீழ்ச்சியடைந்ததோடு, அண்மைய மாதங்களில் அவதானிக்கப்பட்ட நிலையான வளர்ச்சி உத்வேகத்தை மாற்றியுள்ளது. சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள்[1] 2026 மாச்சில் ஐ.அ.டொலர் 224 மில்லியன் தொகையாக மதிப்பிடப்பட்ட அதேவேளை ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2026இன் முதலாம் காலாண்டில் ஐ.அ.டொலர் 954 மில்லியன் தொகைக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 15.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

- 2026 மாச்சில், தொழிலாளர் பணவனுப்பல்கள்[2] ஐ.அ.டொலர் 815 மில்லியனிற்கு அதிகரித்து, 17.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. ஒட்டுமொத்தமாக, ஆண்டின் முதலாம் காலாண்டில் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் 26.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

- அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 64 மில்லியன் தொகையிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்த வேளையில், முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் ஆகிய இரண்டும் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2026 மாச்சு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 10 மில்லியன் தொகையிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

- சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், 2026 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 7.0 பில்லியனாகக் காணப்பட்டன. இவ் வீழ்ச்சிக்கு மத்திய வங்கி மூலமான தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளுக்கு மத்தியிலும், முக்கியமாக வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் காரணமாயமைந்தன.

- 2026 பெப்புருவரியின் பிற்பகுதியில் மத்திய கிழக்கு யுத்தத்தின் ஆரம்பத்தினைத் தொடர்ந்து ஏற்பட்ட வெளிநாட்டுத் துறை அழுத்தங்களுக்கு மத்தியில், 2026 ஏப்பிறல் இறுதியுள்ளவாறு, ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபா ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் 2.9 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

விபரமான புள்ளிவிபரங்கள் மாதாந்த வெளிநாட்டுத் துறைச் செய்தித்திரட்டிலும் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தின் வெளிநாட்டுத்துறைப் புள்ளிவிபர இணையப் பக்கங்களிலும் கிடைப்பனவாகக் காணப்படுவதுடன் அவற்றினைப் பின்வரும் இணையத்தள இணைப்புகள் மூலம் அணுக முடியும்:
https://www.cbsl.gov.lk/ta/வெளிநாட்டுத்-துறை-செய்தித்திரட்டு
https://www.cbsl.gov.lk/ta/புள்ளி-விபரங்கள்/புள்ளிவிபர-அட்டவணைகள்/வெளிநாட்டுத்-துறை

---

[1] *நாளொன்றிற்கான சராசரிச் செலவிடலானது 2025 ஒகத்திலிருந்து இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது.*

[2] *டித்வா புயலினைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற நிதியியல் உதவி போன்ற ஏனைய பணவனுப்பல்களை இது உள்ளடக்கலாம்.*

## வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | மாச் 2025 (ஐ.அ.டொ. மில்) | மாச் 2026 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன – மாச் 2025 (ஐ.அ.டொ. மில்) | சன - மாச் 2026 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைக் கணக்கு மீதி** | 478.8 | 44.6 | -90.7 | 947.7 | 531.5 | -43.9 |
| **வர்த்தக மீதி** | -395.6 | -879.7 | | -1,539.6 | -2,310.3 | |
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,241.7 | 1,254.3 | 1.0 | 3,347.4 | 3,460.8 | 3.4 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,637.3 | 2,134.1 | 30.3 | 4,887.0 | 5,771.2 | 18.1 |
| **பணிகள் கணக்கு (தேறிய)** | 393.3 | 226.6 | -42.4 | 1,220.0 | 973.1 | -20.2 |
| பணிகள் - உட்பாய்ச்சல்கள் | 665.0 | 541.7 | -18.5 | 2,035.1 | 1,929.8 | -5.2 |
| *இதில்,* | | | | | | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் (ஆ) | 354.0 | 223.7 | -36.8 | 1,122.3 | 954.0 | -15.0 |
| கடல் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள் | 152.4 | 153.7 | 0.8 | 489.0 | 461.7 | -5.6 |
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள் | 74.5 | 60.9 | -18.3 | 202.0 | 177.4 | -12.2 |
| பணிகள் - வெளிப்பாய்ச்சல்கள் | 271.7 | 315.1 | 16.0 | 815.2 | 956.7 | 17.4 |
| *இதில்,* | | | | | | |
| வெளிநாட்டுப் பயணம் | 68.8 | 98.3 | 42.9 | 199.2 | 369.2 | 85.4 |
| கடல் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள் | 69.8 | 70.3 | 0.6 | 269.3 | 203.0 | -24.6 |
| **முதலாந்தர வருமானக் கணக்கு (தேறிய)** | -198.7 | -104.5 | | -505.5 | -395.5 | |
| முதலாந்தர வருமானக் கணக்கு - உட்பாய்ச்சல்கள் | 66.8 | 71.6 | 7.3 | 150.1 | 183.6 | 22.3 |
| முதலாந்தர வருமானக் கணக்கு - வெளிப்பாய்ச்சல்கள் | 265.5 | 176.1 | -33.7 | 655.7 | 579.0 | -11.7 |
| *இதில்,* | | | | | | |
| நேரடி முதலீட்டுடன் தொடர்பானவை | 130.7 | 85.3 | -34.7 | 277.9 | 218.9 | -21.2 |
| முதலீட்டுச் சொத்துப் பட்டியலுடன் தொடர்பானவை | 40.4 | 42.6 | 5.4 | 117.1 | 156.0 | 33.2 |
| ஏனைய முதலீட்டு வட்டி | 91.0 | 47.0 | -48.3 | 254.0 | 198.7 | -21.8 |
| **இரண்டாந்தர வருமானக் கணக்கு (தேறிய)** | 679.8 | 802.3 | 18.0 | 1,772.9 | 2,264.2 | 27.7 |
| *இதில்,* | | | | | | |
| தொழிலாளர் பணவனுப்பல் - உட்பாய்ச்சல்கள்[1] | 693.3 | 814.8 | 17.5 | 1,814.4 | 2,294.9 | 26.5 |
| தனிநபர் பரிமாற்றல்கள் வெளிப்பாய்ச்சல்கள் | 13.6 | 12.6 | -7.5 | 42.0 | 30.9 | -26.4 |
| **நிதியியல் கணக்கிற்கான முக்கிய பாய்ச்சல்கள்** | | | | | | |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய பாய்ச்சல்கள் (இ) | -5.7 | -10.2 | | -36.0 | -62.4 | |
| அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய பாய்ச்சல்கள் | 49.2 | -63.9 | | 92.5 | 6.20 | |
| ஒதுக்குகளில் மாற்றம் (ஈ) | 444.4 | -243.6 | | 408.6 | 188.1 | |

**மூலங்கள்:** இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுங்கம், இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது

(ஆ) சுற்றுலாவிலிருந்தான வருவாய்களானது சுற்றுலாப் பயணிகள் வருகைகள், சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவிடலின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. சராசரி தங்கும் காலம் மாதத்திற்கு மாதம் மாற்றமடைவதுடன் சுற்றுலாப் பயணிகள் குடியேற்றத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாளொன்றிற்கான சராசரி செலவிடல் 2025இன் ஓகத்திலிருந்து இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நடத்தப்படும் புதிய அளவீட்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது

(இ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கின்றது

(ஈ) ஒதுக்குச் சொத்து நிலைமையினைப் பாதிக்கின்ற மதிப்பீட்டு மாற்றங்களை உள்ளடக்கின்றது

[1] *டித்வா புயலினைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற நிதியியல் உதவி போன்ற ஏனைய பணவனுப்பல்களை இது உள்ளடக்கலாம்..*